

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது
சுன்னாகம் தெற்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட
உயர் வேளாள் குல ஸ்ரீமதி

***சிவஞானசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை***

அம்மையார்
சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும்
தற்போது சுன்னாகம் தெற்கைத் தற்காலிக
வதிவிடமாகவும் கொண்ட

**உயர் வேளான் குல ஸ்ரீமதி**
***சிவஞானசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை***
**அம்மையார்**

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

**23-12-2004**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அளவற்ற பாசத்துடன் எமை அரவணைத்து, அன்புடன் பேணிக்காத்து, அறிவுரைகள் கூறி அனைவரையும் நல் நிலைக்கு ஏற்றிவைத்தவர் எங்கள் அம்மாவே!

எல்லோர்க்கும் நல்லவராய் பண்பாளராய் வாழ்ந்து இறைபதமெய்தி தெய்வமான எங்கள் அம்மா திருமதி சிவஞானசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை அவர்களின் திருப்பாதக் கமலங்களிற்கு இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அமரர்

# திருமதி சிவஞானசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை

(கூடலுப்பிள்ளை/கூடலில் அக்கா)

அவர்கள்

**தோற்றம்:**
**08-01-1938**

**மறைவு:**
**23-11-2004**

## திதி வெண்பா

ஆண்டு தாரண அணி கார்த் திகைத் திங்கள்
பூண்ட பூர்வ துவாதசித் திதியதனில் - வேண்டுபுகழ்
தங்கச்சி நாச்சிமார் தரணி வாழ்வு நீங்கி
ஆண்டவன் பதமடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருமுறைத் தோத்திரப் பாக்கள்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றோமே.

## தேவாரம்

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்தபோதாக அஞ்சலென்
றருள் செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்துநின்று
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் சுரந்து
பின்னைப் பறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் வீகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்துனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியேசேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## கோவிலுக்கு உள்ள சிறப்பு

மற்ற இடங்களில் இறைவனை நினைந்து தியானிப்பதாலும், துதிப்பதாலும், வழிபடுவதாலும், வினைகள் வெதும்புகின்றன. கோவிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து எரிந்து கரிந்து நீறாகி விடுகின்றன. கொடிய வெயிலில், ஒரு துணியை வைத்தால் அந்தத் துணி வெதும்புமே தவிர சாம்பல் ஆகாது. சூரிய காந்தக் (லென்ஸ்) கண்ணாடியை வெயிலில் வைத்து, அதன் கீழ் வரும் மற்றொரு வெயிலில் (ஒளியில்) துணியை வைத்த உடனே அது சாம்பலாகி விடுகிறது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெயிலுக்கு உண்டு. பரந்து விரிந்து இருக்கின்ற சூரியனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூரியகாந்தக் கல் பாய்ச்சுகிறது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெயிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோவிலில் இறைவனை வழிபடுவது, சூரியக் காந்தக் கண்ணாடியின் கீழ் வேட்டியை வைப்பது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சிவஞானசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை

அவர்களின்

# வரலாற்றில் சில வரிகள்......

நினைவுகளின் வலிசுமந்து காலநதி கரைகிறது. அம்மா இவ்வுலகில் நீ இல்லையென்றாயிற்று. ஒரு மரணத்தால் எம் இதயங்கள் கலங்க நீ போய்விட்டாய். உன் வரலாறு நீண்ட கதை. ஒரு மனிதனின் பின்னே நீண்டு செல்லும் அதன் சந்ததியோடு. அம்மா உனதும் அவ்வாறே. அதனால் உன் ஆன்மா சாந்தியடையும் என்ற நம்பிக்கையுண்டு.

ஈன்று புறந்தந்து எமை ஆளாக்கிய
நிரப்ப முடியாத உன் இடத்துக்காய்
விழி நீர் சொரிந்து......
இன்னும் காலப்பெரு வெளி நீள்கிறது.

உன் முகவுரைக்காய் எதைக்கூற? மிதமிஞ்சிய உன் சகிப்புத்தன்மையையா? எதையும் விஞ்சாப் பொறுமை. நட்புடன் பழகும் பண்பு. ஓய்ந்திருக்காத கை கால்கள். பகை தேடா வாழ்வு. எதைக்கூற? சாவு தன் பொறுமையின்றி அழைத்து விட்டதே.

அம்மாவின் பலாலி மண் எத்தனை வளமானது. குழந்தைகள் கூடச் சொல்லுமளவிற்கு பலாலி என்ற ஊர் பிரசித்தமானது. இப்போது உயர் பாதுகாப்பு வலயத்துள் சிக்குண்ட அம்மண்ணிலிருந்து தான் அம்மாவின் வாழ்வு தொடங்கியது. நீண்ட வளமான தோட்ட நிலங்கள், பனங்கூடல்கள், ஆர்ப்பரிக்கும் கடல், அருள் பாலிக்கும் கோயில்கள் அனைத்தையும் அரவணைத்த வளமான மண் அம்மாவின் சந்ததியின் மூலவேர்.

பலாலி உயர் வேளான் குல மன்னஞ்சீமா, சின்னத்தம்பி காசிப்பிள்ளைக்கும் (ஆசிரியர்) கொல்லங்கலட்டி உயர் வேளான் குல முருகேசர் சந்தாத்தைப்பிள்ளை தம்பதிகளின் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்திற்கும் மகளாக 08.01.1938 அன்று பலாலி மண்ணிலே தங்கச்சிப்பிள்ளை அவதரித்தார். இவருக்கு அடுத்தபடியாக அமரர் பாலசுப்பிரமணியம் தம்பியாகவும், சகோதரியாக தருமராணியும் (ஓய்வு பெற்ற அதிபர்), சகோதரனாக தங்கராசாவும் உடன் பிறப்புக்களாயினர். இவர் தனது கல்வியை பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கற்றார். சிறு வயதில் தாயை இழந்ததனால் தன் கல்வியை இடையில் நிறுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்காளானார். எனினும் இவரது தந்தையார் பிரசித்தி பெற்ற தமிழ் ஆசிரியராக இருந்தமையால் இவரிடம் தமிழில் புலமையும் இலக்கிய ஈடுபாடும், சமயப்பற்றும் அன்று தொட்டு இருந்து வந்தது. இவரது தாயார் இறந்த பிற்பாடு தனது தாய் மாமன்மார்களான காசிப்பிள்ளை, கந்தையா, இளையதம்பி ஆகியோரே இவரையும் இவரது சகோதரர்களையும் வளர்த்தனர். அக்காலத்திலேயே குடும்பப்பொறுப்பை ஏற்று நடாத்தி இவரே அக் குடும்பத்திற்கு அச்சாணியாய் விளங்கினார்.

காலங்கள் உருண்டோடின. கல்யாணப் பருவம் வந்தவுடன் தொல்புரத்தைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் விசுவநாதர், விசுவநாதர் சிவபாக்கியம் (அமரர்கள்) ஆகியோரின் புதல்வனான சிவஞானசுந்தரம் அவர்களை இவரிற்கு அன்று பெரியோர்கள் நிச்சயித்து திருமணம் செய்து வைத்தனர். திருமணம் செய்து சிறிதுகாலம் இவர் தொல்புரத்திலேயே வாழ்ந்தார். பின்பு தந்தையார் கடும் சுகயீனமுற்றதனால் அவரைப் பராமரிக்கும் பொருட்டு மீண்டும் பலாலியிலேயே தனது வாழ்வைத் தொடர்ந்தார்.

இல்லற வாழ்வின் பயனாக இவர் கணேசகுமார் (விஞ்ஞான ஆசிரியர் - யா/குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை) ராதிகா (பிரான்ஸ்), சுரேஷ்குமார் (கணிய அளவையியலாளர் B.Sc in Q.S- நோர்வே), ரேணுகா, சந்திரிகா, ரமேஷ்குமார் (ஆசிரியர் - யா/ஏழாலை மகா வித்தியாலயம்), கிருஷ்ணகுமார் (கட்டிட தொழில் நுட்பவியலாளர்) ஆகிய பிள்ளைகளைப் பெற்று ஆளாக்கினார். இப்பிள்ளைகளில் கடைசி இரு ஆண்மக்களையும் தவிர ஏனையோரை திருமணபந்தத்தில் இணைத்துச் சிறப்பாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மூத்தமகன் கணேசகுமார் சண்டிலிப்பாய் சதானந்தன் இராசம்மா தம்பதிகளின் ஏகபுத்திரி கௌரியையும் (ஆசிரியை), மூத்தமகள் ராதிகா சுன்னாகம் பிரபல வர்த்தகர் அமரர் சாந்தலிங்கம், திருமதி நல்லம்மா சாந்தலிங்கம் தம்பதிகளின் புதல்வன் பாஸ்கரன் (பிரான்ஸ்) அவர்களையும், அடுத்த மகன் சுரேஷ்குமார் குரும்பசிட்டி சு. கனகரட்ணம், பவளராணி தம்பதிகளின் இரண்டாவது மகள் உஷாவையும் (M.Sc. ஆங்கில இலக்கியம் - நோர்வே), அடுத்த மகள் ரேணுகா வீரகத்திப்பிள்ளை, கனகம்மா தம்பதிகளின் புதல்வன் வைத்திய கலாநிதி Dr. சண்முகராஜா (யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களையும், இளைய மகள் சந்திரிகா தெல்லிப்பளை சிவசுப்பிரமணியம் - பஞ்சரட்ணேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் வித்தியாகுமார் (அரச மரக்கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்) அவர்களையும் திருமணம் செய்து முறையே மூத்த மகனிற்கு வித்தகன் (உடுவில் மகளிர் கல்லூரி) மூத்த மகளிற்கு பானுஜா, பாகிராம், பாசுகி (பிரான்ஸ்) இரண்டாவது மகனிற்கு மைத்திரி (நோர்வே), இரண்டாவது மகளிற்கு நிலவன், கானகன், இளைய மகளிற்கு சௌமியா என்றவாறு பேரக் குழந்தைகளாக இருக்க அம்மா தனது கடைசி மகன்மார்கள் இருவரதும் மணக்கோலத்தையும் பார்க்காது போய்விட்டார்.

1999 ஆம் ஆண்டு வந்த பாரிசவாதம் எனும் பக்கவாத நோயினால் அவதியுற்று பிள்ளைகளின் ஆழ்ந்த கவனிப்பால் ஒரு வருடத்தில் குணமாகி சந்தோசமாக வாழ்வைக் கழித்த நாட்களில் அம்மாவின் பொழுதுகள் பக்கத்தே வீற்றிருக்கும் வைரவக் கடவுளைத் தரிசிப்பதும், மற்றும் அயலிலுள்ள கோயில்களிற்குச் சென்று வழிபடுவதுமாக பிரயோசனமாகக் கழிந்தன. பேரக் குழந்தைகளின் மழலை மொழி கேட்டபடி அம்மாவின் வாழ்நாட்கள் உருண்டோடின. இப்படியாக பொழுது விடிந்த ஒரு நாள் லேசான காய்ச்சல், தலைச்சுற்றுடன் இரவுப் பொழுது பிள்ளைகளுடன் கதைத்துவிட்டு உறங்கிப் போகிறார். ஆனால் வழமைபோல் மீண்டும் விழிக்கவில்லை. ஆம். அம்மா மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார். 23.11.2004 அன்று தனது பற்று முற்றும் துறந்து இறைவனடி சேர்ந்து விட்டார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்கள்

## அம்மா

அம்மா எங்கள் தெய்வம்
அன்பின் வடிவாம் அம்மா
அம்மா எங்கள் தெய்வம்
அமுதின் உருவாம் அம்மா

கரும்பாய் மகிழப் பேசி
கனியாய் இனிக்கப் பாடி
அரும்பாய் மலர்ந்த முகத்தால்
அமுதாய்க் கட்டி அணைப்பாள்

புழுதி ஆடி உடம்பைப்
புன்மை செய்த போதும்
மழலை பேசி அணைத்து
வாரிக் கொஞ்சும் தெய்வம்

கண்ணிற் கண்ட தெய்வம்
கவலை போக்கும் தெய்வம்
மண்ணிற் கண்ட தெய்வம்
மதிக்கும் அம்மா தெய்வம்.

*பண்டிதர் சி. கார்த்திகேசு*
*(சேந்தன்)*
*"சேந்தனின் பிள்ளைப்பாடல்கள்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயல் குட்டி

அண்ணா வளர்க்கும் முயல் குட்டி
அழகு வெள்ளை முயல் குட்டி
கண்ணோ சிவப்பு முயல் குட்டி
காதை உயர்த்தும் முயல் குட்டி

துள்ளிப் பாயும் முயல் குட்டி
தூரப் போகா முயல் குட்டி
அள்ளித் தூக்கி நான் கொஞ்சும்
அழகு வெள்ளை முயல் குட்டி

கிள்ளிப் போட்ட குழைக்காக
கீழே இருந்து முகம் பார்க்கும்
வெள்ளை வெள்ளை முயல் குட்டி
வீட்டில் வளர்க்கும் முயல் குட்டி

*கல்வயல் வே. குமாரசாமி*
*"பாப்பாப்பாட்டு"*

## பசுவும் கன்றும்

அம்மா என்று பசுவும் கன்றை
அழைக்கக் கத்துது
அந்தக் குரலும் கேட்டுக் கன்றும்
அங்கே வருகுது.

அருகே வந்த கன்றைப் பசுவும்
அணைத்து நக்குது
ஆவலாகக் கன்றும் பாலை
முட்டிக் குடிக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைக் குடித்த கன்றுக்குட்டி
துள்ளி ஓடுது
பசுவும் கன்றைத் தொடர்ந்து தொடர்ந்து
பின்னே போகுது.

*த. துரைசிங்கம்*
*"குழந்தைப் பாடல்கள்"*

## சிட்டு

சின்னச் சின்னக் குஞ்சு
சிட்டுக் குருவிக் குஞ்சு
என்னை என்னைப் பார்க்கும்
ஏதோ சொல்லித் தாவும்

தாவித் தாவிப் பறக்கும்
தரையில் தீனி பொறுக்கும்
வாவா என்றே அழைக்கும்
வாலை ஆட்டிப் பறக்கும்

சிட்டுக் குஞ்சில் ஆசை
சேர்ந்து பறக்க ஆசை
பட்டுச் சிறகும் இல்லை
பறக்க வழியும் இல்லை.

*அம்பி*
*கொஞ்சுந் தமிழ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி

சின்னஞ் சிறிய பெட்டிக்குள்ளே
பென்னம் பெரிய மூளை!
சின்னஞ் சிறிய பெட்டியதற்கு
கணனி என்று பெயராம்!

விசைப் பலகை சுட்டியும்
விரி திரையும் மையமும்
இணைந்து ஒன்றாய் கணனியாம்
இணை யில்லாத கருவியாம்.

பாட்டும் கதையும் கூறிடும்
படமும் வரைந்து காட்டிடும்
கேட்ட கணக்கும் தீர்த்திடும்
கூடி விளை யாடிடும்.

சுட்டி கையில் பற்றியே
விசைப் பலகை தட்டுவோம்
மட்டில் லாத மகிழ்வுடன்
கணனியோடு கூடுவோம்.

- இயல்வாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிச்சக்கரவண்டி

காலால் மிதிக்க ஓடும் வண்டி
காற்றை வலித்துப் போகும் வண்டி
ஆளாள் ஏற்றிச் செல்லும் வண்டி
அழகாய் பயணம் செய்யும் வண்டி

பாரம் பலவும் சுமந்தி டலாம்
பாதை எதிலும் சென்றி டலாம்
தூரம் குறுக்கி உள் வழியே
துணிவாய் பயணம் செய்தி டலாம்.

எரி பொருளோ தேவை யில்லை
எவரும் வாங்கும் எளிய விலை
நன்மை யதே நாளுஞ் செய்யும்
நச்சுப் புகையும் இதற்கு இல்லை.

- இயல்வாணன்

## காற்று

ஆடும் ஓடும் சுழன்றிடும்
அகப் பட்டதைத் தூக்கிடும்
பாடும் கூடும் தேடிடும்
பாரில் எங்கும் சென்றிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையை மரத்தை அசைத்திடும்
இன்பந் தனை ஊட்டிடும்
வளியின் அசையும் வடிவமாம்
வண்ண முகிலை ஓட்டுமாம்.

வாடை கச்சான் சோழகம்
வகை வகையாய் காற்றுக்கள்
தேடிக் காற்று வாங்குவோம்
தெம்மாங்கு தான் பாடுவோம்.

- இயல்வாணன்

## நிலவும் இரவும்

வானில் நிலவு எறிக்குது
வாகாய் கண்ணைப் பறிக்குது
வாடைக் காற்று வீசுது
வாசம் கொண்டு வீசுது

தென்னை மரமும் ஆடுது
சேர்ந்து இலைகள் ஆடுது
வண்ண மரக் கிளைகளும்
நிலவில் ஒளிர்ந்து ஆடுது.

தவளை தத்தி நடக்குது
தாவி வெளவால் பறக்குது
அலறி ஆந்தை முறுக்குது
அரவம் கூடக் கொறிக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு முன்றில் நின்றுமே
விரும்பி இதனைப் பார்ப்போமே!
ஏட்டில் சொல்லிடா அழகது
இன்பம் நிறைந்த பொழுதது.

- இயல்வாணன்

## ஆற்றங்கரைக் காட்சி

வாருங்கள் வாருங்கள் தோழியரே!
வண்ணக் குடந் தனைத் தூக்கிக் கொண்டு
கூடுங்கள் பாடுங்கள் ஆடுங்கடி!
கும்மி கொட்டிக் கொண்டு சென்றிடுவோம்!

தோற்றும் கீழைவான் சூரியனார்
சுடரும் அழகதைப் பாருங்கடி!
ஆற்றில் சலசலத் தோடும் நீரில்
அணிவகுத்துச் செல்லும் மீன்கள் பாரீர்!

தூண்டில் கட்டியொரு மீனவனும்
தூய வெள்ளை நிறக் கொக்குகளும்
வேண்டும் வரங் கேட்டு நீரின் மேலே
விரத மிருப்பதைப் பாருங்கடி!

மூழ்கி யெழுந்துநீ ராடிடுவோம்!
முழுதும் உடைகளைத் துவைத்திடுவோம்!
மொண்டு குடந்தனை நிரப்பிடுவோம்
மோதும் அலையெனத் திரும்பிடுவோம்.

- இயல்வாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எமையெல்லாம் வாழ வழிகாட்டிய எம் பாசமிகு குடும்பத்தலைவியின் பிரிவால் துயருற்றவேளை எமக்கு ஆறுதல் கூறியோர்க்கும் ஈமச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கட்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோர்க்கும், இம் மலரினை வடிவமைத்த பிரியன் அச்சகத்தாருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளை நடாத்தி வைத்த சமய குருமார்கட்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும் மற்றும் இத்துயர்ச் செய்தி கேட்டு பல வழிகளிலும் எமக்குதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**இங்ஙனம்**
**கணவர், மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**நிரந்தர முகவரி:**
பலாலிமத்தி, பலாலி
**தற்போதைய முகவரி:**
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.



பிரியன் பதிப்பகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி தங்கச்சிப்பிள்ளை

அவர்களி

## வம்சாவ

*அமரர் சின்னத்தம்பி காசிப்பிள்ளை*
*பலாலி மன்னஞ்சீமா*
*(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*

+

தங்கச்சிப்பிள்ளை
(தங்கச்சி நாச்சியார்)
+
விசுவநாதர் சிவஞானசுந்தரம்

தருமராணி
(ஓய்வு பெற்ற அதிபர்)
+
தனலிங்கம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
↓
வத்சலா
விஜயசலா
கௌசலா

கணேசகுமார்
(ஆசிரியர்)
+
கௌரி
(ஆசிரியை)
↓
வித்தகன்

ராதிகா
+
பாஸ்கரன்
(பிரான்ஸ்)
↓
பானுஜா
பாகிராம்
பாசுகி

சுரேஸ்குமார்
(நோர்வே)
(B.Sc. in Q.S)
+
உஷா
(M.Sc.Eng Lit)
↓
மைத்திரி

ரேணுகா
+
Dr. வீ. சண்மு
(யாழ் போதனா வைத்
↓
நிலவன்
கானகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# பிள்ளை சிவஞானசுந்தரம்

அவர்களின்

# வம்சாவழி

+

*முருகேசு சந்தாத்தைப்பிள்ளை*
*தம்பதியினரின்*
*மகள் தங்கம்*
*(கொல்லங்கலட்டி)*

பாலசுப்பிரமணியம்
(அமரர்)
+
இராஜேஸ்வரி

சிவபாலன்
சிவதர்சனன்
சிவறாஜினி

தங்கராசா

ரேணுகா
+
r. வீ. சண்முகராஜா
(போதனா வைத்தியசாலை)

நிலவன்
கானகன்

சந்திரிகா
+
வித்தியகுமார்
(மரக்கூட்டுத்தாபனம்)

சௌமியா

ரமேஸ்குமார்
(ஆசிரியர்)

கிருஷ்ணகுமார்
(ராகவன்)
(பொறியியல் பட வரைஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நனன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

பிரியன் பதிப்பகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org